

நேஷனல் புரொடக்ஷன்ஸ்

மாப்பிள்ளை

தமிழ்

பேபி

மாப்பிள்ளை

தயாரிப்பு

நேஷனல் புரொடக்ஷன்ஸ்

சென்னை 10

சினரியோ டைரக்ஷன்......................................T. R. ரகுநாத்
கதை வசனம்......................................V. N. சம்பந்தம்
பாடல்கள்......................................தஞ்சை ராமையாதாஸ்
சங்கீத டைரக்ஷன்............N. S. பாலகிருஷ்ணன் & T. R. பாப்பா
ஒளிப்பதிவு..........................P. S. செல்வராஜ் & R. சம்பத்
ஒலிப்பதிவு......................................M. லோகநாதன்
கலைஜோடனை..........................குப்புஸ்வாமி & செல்லம், பாபு
லபரேடரி......................................T. R. எதிராஜ்
எடிட்டிங்......................................S. A. முருகேஸ்
ஆடைகள்......................................A. ராமசாமி
மேக் - அப்......................................ஹரிபாபு & தனகோடி
டைரக்ஷன் உதவியாளர் } V. நடராஜ் S. A. முருகேன் M. ராமகிருஷ்ணன் N. துரைசாமி

பின்னணி

P. லீலா P. G. K. ஜிக்கி A. P. கோமலா ஜயலக்ஷ்மி
ராணி ரத்னமாலா ராஜா ஜெயசக்திவேல்

ஸ்டுடியோ : **நியூடோன் - மதராஸ்**

நிர்வாகம்

D. ராமதாஸ்

உதவி **C. K. பிரசாத்**

RIGHTS CONTROLED BY

PENACHANA BROS.
METAL HOUSE
8-G. LANDONS ROAD, KILPAUK, MADRAS 10.

---- மாப்பிள்ளை ----

(பாத்திரங்கள்)

T. R. ராமச்சந்திரன்........................பெரியண்ணன்

P. S. வீரப்பா..............இன்ஸ்பெக்டர் சங்கரம் பிள்ளை

P. V. நரசிம்மபாரதி........................டாக்டர் குமார்

R. பாலசுப்ரமணியம்..................சுந்தரலிங்கம் பிள்ளை

V. K. ராமசாமி..............................கண்ணுச்சாமி

T. K. ராமச்சந்திரன்..............................சிகாமணி

C. S. பாண்டியன்..............................கோதண்டம்

T. V. ராதாகிருஷ்ணன்..............................சக்கரை

K. A. தங்கவேலு...........ஜோஸ்யர் சுப்பையா பிள்ளை

P. K. சரஸ்வதி..நளினி

K. லக்ஷ்மிகாந்தம்..............................உஷாராணி

M. லக்ஷ்மி ப்ரபா..................................மரகதம்

M. சரோஜா..விஜயா

C. K. சரஸ்வதி...................................பார்வதி

M. S. S. பாக்யம்..............................முத்தம்மா

M. N. ராஜம்.............................நர்ஸ் சுலோசனா

T. K. புஷ்பவல்லி.......................................சீதை

மற்றும் பலர்

---- மாப்பிள்ளை ----

கதைச்சுருக்கம்

சென்னையைச் சேர்ந்த ஸ்ரீமான் சுந்தரலிங்கம் பிள்ளையின் மகனான சிகாமணி, நடத்தி வந்த அச்சாபீஸில் ப்யூனாக இருந்த பெரியண்ணன் அதிர்ஷ்டவசமாக லட்சாதிபதி ஆகிறான். அதனால் பொறாமைகொண்ட சிகாமணி அவன் பணத்தைப் பறிக்க பலசதிகள் செய்கிறான். மேலும், சிறுவயதிலிருந்தே அந்த ஊர் டாக்டரான குமாரின் பேரில் காதலாகி, பழகி வந்த தன் தங்கை நளினியை நயவஞ்சகமான முறையில் பெரியண்ணனுக்கு மணம் செய்து கொடுத்து, அவனை தன்னுடைய மாப்பிள்ளையாக்கிக் கொள்கிறான். இரவு காத்த கிளியான டாக்டர் குமார், மனம் நொந்து, நாளடைவில் மறந்தும் விடுகிறார்.

இதற்கிடையில், அதே ஊரில் போலீஸ் இன்ஸ்பெக்டரான சங்கரம் பிள்ளைக்கும் மனைவி மரகதத்திற்கும் சில ஆண்டுகளுக்கு முன் காணமற் போன தங்கள் குழந்தையின் காரணமாக சச்சரவு ஏற்பட்டு, வீட்டை விட்டு வெளியேறிய மரகதம், தன் தகப்பனான ஜோஸ்யர் - சுப்பையா பிள்ளையின் வீட்டுக்குப் போகிறாள். ஆனால், ஜோஸ்யரின் இரண்டாம் தாரமான சீதையின் கொடுமையால், அங்கிருந்தும் வெளியேறி, இறுதியில் டாக்டர் குமாரின் ஆதரவில் இருந்து வருகிறாள்.

தன் தங்கையைக் கட்டிக் கொடுத்தும் தன் எண்ணம் நிறை வேறாமல் போகவே, மேலும் சதி

ஆலோசனை செய்கிறான் சிகாமணி. இந்த நிலையில் பிரசவவேதனைப் படுகிறாள் நளினி.

அதையும், டாக்டர் குமார்தான் கவனிக்க நேரிடுகிறது. இருந்தாலும், கடமை உணர்ச்சியோடு கவனித்து, சுகப்படுத்தி அனுப்புகிறார். குழந்தை பிறந்த மகிழ்ச்சியில், அந்த குடும்பமே குதூகலமாக இருக்கிறது. ஆனால், குழந்தையின் ஜாதகம், தாயையும் குழந்தையையும் தனியாகப் பிரித்து வைக்கிறது. அதனால், சோகக் கடலில் மிதக்கிறாள் நளினி.

அதுமட்டுமல்ல, குழந்தையின் பிறந்த நாள் கொண்டாட்டம் நடக்கிறது. குழந்தையைக்காணும் ஆவலில் வருகிறாள் நளினி. மாமியார் பார்வதியும், மற்றவர்களும் அவளை விரட்டுகின்றனர். தாய்ப் பாசத்தால் தன்னையும் மீறிப்பேசுகிறாள் நளினி. இடை இடையே இருமுகிறாள். அதனால், அவள் மேல் சந்தேகம் கொண்ட சிகாமணி, அவளுக்கு க்ஷயரோகம் என்றும், அது பெரிய தொத்து நோய் என்றும் சொல்ல, எல்லோரும் அதை ஆமோதிக்கவே, நளினி, ஒரு தனிக் குடிசையில் வசிக்க நேரிடுகிறது.

டாக்டரும் அடிக்கடி வந்து நளினியை கவனித்துப் போகிறார். ஆனால், சகலத்திலும் குற்றம் கற்பிக்கும் சதிகார சிகாமணி, இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, டாக்டரும் நளினியும், கள்ளக் காதல் நடத்துவதாக குற்றம் சாட்டுகிறான்.

ஆகவே, நளினியை வீட்டைவிட்டே விரட்டி விடுகிறான் பெரியண்ணன். அதனால், டாக்டரின்

நர்ஸிங் ஹோமில் இடம் கொடுக்கப்பட்டு, கௌரவ மாக நடத்தப்படுகிருள் நளினி.

நளினியின் வாழ்வு இப்படி நாசமாகிவிட்டதை நினைத்து நோய் வாய்ப்பட்டிருக்கும் சுந்தரலிங்கம் பிள்ளையைக் காண வருகிருன் பெரியண்ணன்.

பலவகையிலும் ஏமாற்ற மடைந்த சிகாமணி. அன்றிரவு பெரியண்ணனை கொலை செய்யவும் முடிவு செய்து ஏற்பாடு செய்கிருன். பிறகு என்ன நடந்திருக்கும் என்பதை திரை சொல்லும்!

: : : : மாப்பிள்ளை : : : :

1. விஜயா

இசையமைப்பு : T. R. பாப்பா

வாழ்வில் இனி நாமே...... பெண்கல்வி
வளர சேவை செய்வோம்...... பெண் உரிமை
வழியைத் தேடிச் செல்வோம்...... (புதுவாழ்வில்)

நாட்டின் பழமை நீங்கிட வேணும்
நாளும் புதுமை ஓங்கிட வேணும்
வீட்டில் அடிமை யென்றே...... அடுப்பிலே
வேக வேணு மென்றே...... புருஷர்கள்
விலங்கை பூட்டுவார்
தகர்த்து காட்டுவோம்

......(வாழ்வில்)

அம்மியில் மஞ்சள் அரைத்திடும் கைபால்
அவசியம் பேனு பிடித்திடவேணும்
பானை கலயத்திலே...... வீணாக
பதுங்கி கிடக்காதே...... பெண்களும்
படிச்சு காட்டணும்
பதவி நாட்டணும்

......(வாழ்வில்)

2. குமார்—நளினி

இசையமைப்பு : T. R. பாப்பா

இருவரு காதலில் விஞ்ஞானம் கண்டவர் யாரோ
காரணம் இல்லாமல் மயங்கிடுவாரோ
குமார் கண்களின் தியாகமே காதலின் வேகமே
கனிரசமே உனையின் நான் மறந்திடுவேனோ
இருவரும் ....(காதலில்

நளினி ஒரு மலர் மீதிலே இருமணம் போலே
உலகினில் நாமே இணைபிரியோமே
ஓவியமே ஜீவியமே உனைப்பிரிவேனோ

இருவரும் ....(காதலில்)

குமார் வான் முகில் மேவும் வளர் மதி நீயே

நளினி தேன் மலர் மேவும் தென்றலும் நீயே

இருவரும் ஆனந்தமாய் நாமினிமேல் வாழ்திடுவோமே

இருவரும் ....(காதலில்)

3. நளினி—உஷா

இசையமைப்பு: N. S. பாலகிருஷ்ணன்

ராகம்—கௌரிமனோஹரி. தாளம்—மிஸ்ரம்

நளினி சிறந்த உலகினில் யாவவும் சிவமயமே
தேடாத செல்வமே.

உஷா பரந்த உலகினில் யாவும் பணமயமே
பலர் வணங்கும் தெய்வமே

நளினி பணத்திலே மதிமயங்கியே...நல்ல
குணத்தையே பறிகொடுத்து வாழ்ந்திடும்
நீ உனது நிலமை இழந்திட...வீண்
மனது சபலமடைந்திட
நினைவிலும் உனைக்கனவிலும் மமதையில்
பணமே பழிவாங்கிடும் பாரடி

சிறந்த உலகினிலே......

உஷா ஆடுவதும் சிவமயமெனப்பாடுவதும்
பசிவந்ததும் பறந்துபோகும்
பக்தியும் முக்தியும்
பணம் வந்ததும் பறந்துபோகுமே

பரந்த உலகினிலே

நளினி தாய்க்கருவில் குழந்தை வளர்ந்திட
சேய்க்குணவு தருவது பணமா

உஷா தரைதனில் மரம் வளர்ந்திட தழைந்திட
உறமது தருவது உங்கள் சிவமா

நளினி வித்து முதலா... மரமுதலா

உஷா பக்தி முதலா... பண முதலா

நளினி பரப்ரும்மமே

உஷா பணமே

நளினி சிவமே

உஷா மகிதலமேல்

இருவரும் தான தருமம் நிறைந்திடும் வாழ்வினில்
காணும் சகல இகபர சுகம்பெர
தேகமிதே சந்தேகமிதே
அன்பே சிவமயமே...... நினைந்துனது
மனங்கனிந்து மகிழ்ந்திடவே

அறிவும் திறமையும் உலக அநுபவமே
அதுவே அவசியமே..................................
அறிவு திறமையும் உலக அநுபவமே

ராகம்—வாசஸ்பதி **தாளம்—திஸ்ரம்**

நளினி மாய உலகில் மயக்கமா...... இந்த
மாயஉலகில் மயக்கமா.
மதியேன் இழந்தாய்... இதுபோல்
ஆடம்பரம் ஆகுமா...

(மாய உலகில்)

உஷா மாறும் உலகம் மதிக்குமா...... நிலே
மாறும் உலகம் மதிக்குமா...... நம்
மானம் கார்க்க......
நடை... உடை... நகை வெளி வேஷமும்.
நாளும் உலகில் நிலேக்குமா...... எங்
நாளும் உலகில் நிலேக்குமா

இருவரும் இயற்கை செயற்கை இன்பமே
இகமேல் சுகமாய்
இனிமேல் நாம் வாழ்ந்திடவேணுமே

இயற்கை.

ராகம்—காபி   தாளம்—சதுஸ்ரம்

உஷா மனைவின் மனம் போலே
கணவனும் தினம் வாழும்
மர்மமன்றோ...... இன்பமே

நளினி வறுமையிலும் மனைவி
கணவனுடன் வாழும்
பெருமையன்றோ இன்பமே

இருவரும் வள்ளுவன் வாசுகிபோல்
வையகம் மீதினிலே
வாழ்வது தான் இன்பமே
வாழ்வது

4. சக்கரை—சுலோசனு

இசையமைப்பு : N. S. பாலகிருஷ்ணன்

சக்கரை டோசு கொடுக்கவேணும்...... சரியான
டோசு கொடுக்கவேணும்......
மோசமான எந்த கேசுக்கும் தகுந்த
டோசு கொடுக்க வேணும்—சரியான
டோசு கொடுக்க வேணும்

சுலோ மூணு மணிக்கொரு வேளை தவறாமெ
டோசு கொடுக்கவேணும்

இருவரும் ....டோசு

சுலோ இருந்தது போனது நிலைமை தெரியாத
புதுப்பணக்காரனுக்கும்...... முன்னே

சக்கரை ஏழைப்பாட்டாளி வாழ்வைக்கெடுத்திடும்
இரக்கமே யில்லாத இரும்பு பெட்டிக்கும்

இருவரும் ....டோசு

சுலோ காலத்துக்குத்தகுந்த ஜாலர் போட்டுவரும்
கபோதி பசங்களுக்கும்...... இந்த

சக்கரை காரியம் சாதிக்க...... சொந்த
காரியம் சாதிக்க கோளு மூட்டிவரும்
காக்கா பசங்களுக்கும் டேக்கா கொடுத்து நல்ல

இருவரும் ....டோசு

சுலோ வஞ்சகமாகவே வட்டிக்கு வட்டி
வாங்கு மயோக்யனுக்கும்

சக்கரை பஞ்சகாலத்திலும் பதவிமோகத்திலும்
மிஞ்சி விளையாடும் லஞ்ச பிடாரிக்கும்

இருவரும் ....டோசு

சுலோ கள்ளமார்க்கட்டில் கொள்ளையடிக்கும்
கன தனவான்களுக்கும்...... அசல்

சக்கரை கட்சி பேரைச்சொல்லி...... பல
கட்சி பேரைச்சொல்லி காசைபறிச்சிடும்
பச்சோந்தி கும்பலுக்கும் ப்ராடு பசங்களுக்கும்

இருவரும் ....டோசு

5. நளினி

இசையமைப்பு : N. S. பாலகிருஷ்ணன்

ஆல்ரைட்......ஆல்ரைட்
ஆல்ரைட்

காயும் கனிந்தது வளர்ச்சியாலே உண்மைக்
காதல் மலர்ந்தது அன்பினாலே அதனாலே

நான் ஒரு... ரகசியம்...... சொல்லவா
இப்ப... நான் ஒரு ரகசியம் சொல்லவா
அது... தான் ஒரு அதிசயம் அல்லவா
இன்பமாகவே... அன்பு மீறவே
என்றும் வாழவே இப்ப நான் ஒரு

மாப்பிளை நானே மறவேன் என்றான்
மனமே துணிந்து வந்தான்
கையை நீட்டவே சொன்னான் வளையல் செட்டியுமல்ல
கண்ணைக் காட்டவே சொன்னான் ஆறு நாட்டுவனல்ல
இன்பமாகவே...அன்புமீறவே
என்றும் வாழவே இப்ப...நான் ஒரு

சரஸமாகவே மாமன் மகன் போல்
சகஜமாகவே வருவான்...... அவன்
பரம சாது என்னைப் பாத்தால் போதும்
பரிசு வழக்கம் போல் தருவான்
தினம் சிரித்துப் பேசி வலைவீசி
வந்த திருடன் யார் தெரியுமா
இன்பமாகவே......அன்புமீறவே
என்றும் வாழவே இப்ப நான் ஒரு......

தாளம்—திஸ்ரம்

அந்தரங்கக் காதலினுலே
அந்த நாளே............எந்தன்
ஆருயிர் டாக்டர் என்மேலே

ஆசைவைத்தார் தன்னுலே
அன்பு கொண்டேன் முன்னுலே
வெற்றி கண்டேன் இந்நாளே

ஒரு மனதாக இருவரும்
மகிழ்ந்திடவே...... நாளும் கிட்டவே
தாலிகட்டவே...... மேளம் கொட்டவே

தாளம்—சதுஸ்ரம்

மனம் போலவே மாங்கல்யம் நிஜமே
இந்த மாதம் கல்யாணம் நிச்சயமே என் மனம் போலவே

6. நளினி

இசையமைப்பு: N. S. பாலகிருஷ்ணன்

கண் ணும் கருத்தா குடும்பம் நடத்த தெரிய ணும்
பெண்கள் கடமையே பெரிசா நினைக்கணும் (கண் ணும்)

கால நிலைமையே தெரிஞ்சு வாழணும்...... இந்த
புரிஞ்சு வாழணும்
காசு பணம் வந்தாலும் வீணே
கண்டபடி துள்ளாமல் தானே
கச்சிதமாய் குடும்பம் நடத்த தெரிய ணும்
பெண்கள் கடமையே பெரிசா நினைக்கணும் (கண் ணும்)

தொட்டுத்தாலி கட்டியவன்
முட்டாளாயிருந்தாலும்
கட்டுப்பட்டு ஆகணுமே
கண்ணியமாய் வாழணுமே

மட்டுமரியாதையுடன் தொண்டுசெய்யவேணும்
தொண்டுசெய்யவேணும்
கஷ்டத்திலும் கணவனேடு கலந்து வாழவேணும்
மனமகிழ்ந்து வாழவேணும் (தொ)

ஆங்கிலம் கற்ருலும் அதனுல் ஆயிரம் வந்தாலும்
பதவிகள் ஆயிரம் வந்தாலும்
ஆடம்பரத்தாலே
வீண் ஆடம்பரத்தாலே ஏழைகளை அவமதிக்காதே
எண்ணறக் கற்ருலும் பெண்களுக்கு பின்புத்தி என்ருலும்
ஆடவர்கள்......ஏளனம் செய்தாலும்
அந்த ஏட்டுச்சுவடிக் கிடம் கொடுக்காமலே
நாட்டுக்கு நன்மையை செய்திடவேணும் (ஆங்கிலம்)

பக்தியாலே தெய்வ சக்தியாலே—செய்த
பாபமெல்லாம் போகுமே—பதி
திருபதமலரடி அனுதினம் வணங்கிட (பதிபக்தியாலே)

7. நடனம்

மயங்காதே
மதி மயங்காதே..........மனமே நீ
பண வெறியாலே

அதிர்ஷ்டம் வந்தால் கண் தெரியாதா
அகந்தையினுல் ஒன்றும் புரியாதா

மனமே நீ
பண வெறியாலே
மயங்காதே மதி மயங்காதே

பழமை யெல்லாம் நீ மறவாதே
பகுத்தறிவே என்றும் இழக்காதே

மயங்காதே
மதி மயங்காதே மனமே நீ
பண வெறியாலே

8. கோதண்டம்—முத்தம்மா

இசையமைப்பு : N. S. பாலகிருஷ்ணன்

தண்டம் : ஆம்பளெ பொம்பளெ
அடிக்கடி பாத்தா அதுதானே லவ்வு

முத்தம்மா : ஊஹூம்
அண்ணன் தங்கை போலே
எல்லாரும்——அவசியம் பழகிடணும்

தண்டம் : என்ன
அய்யய்ய

முத்தம்மா : ஆம்பளெ பொம்பளெ
அடிக்கடி பாத்தா அதனாலே வம்பு

தண்டம் : காரு ட்ராமிலே பிச்சுக் காத்திலே
காதல் பேச்சுத்தானே—எங்கும்
கண்கள் வீச்சுத்தானே
அதுவே ஒரு கலைதானே
அதனால் உனை மறவேனே (ஆம்பளெ)

முத்தம்மா : கலையின் பெயரைச்சொல்லி
கொலையைப் பண்ணாதே—காதலை நம்பாதே
உந்தன்—காரியம் பலிக்காதே
பல்லைக்காட்டியே இளிக்காதே
நம்ப நாட்டுக்கு புடிக்காதே (ஆம்பளெ)

தண்டம் : முத்தம்மா நீயே என் ஆசை
பத்தினியன்றோ
சத்தியமாய் நானே உந்தன்
அஸ்பெண்டும் அன்றோ

முத்தம்மா : தண்ட கோதண்டராமா
கண்டபடி பேசலாமா
தாலிகட்டி வந்தவள் போல
கேலிசெய்ய **WIFE** நானல்ல

தண்டம் : வாலிபம்
வாலிபம் வேஸ்டாகலாமா
டியர் லேடி கம் மை டார்லிங்...

முத்தம்மா : கிட்டே வந்தா நானே கோயிங்

தண்டம் : ஆவல் மீறி லவ்வு ரோலிங்

முத்தம்மா : அய்யோ வேண்டாம்
யாரோ அங்கே கம்மிங்

தண்டம் : ஆ.
அய்யா உன்னை சும்மாவிட்டு போவாரா
அய்யா போவாரா

முத்தம்மா : ஆ.

தண்டம் : சும்மா போவாரா.

முத்தம்மா : ஆ.

தண்டம் : இப்பொ போவாரா. இனிபோவாரா.
இப்பொ போவாரா. அய்யா போவாரா

9. நளினி

இசையமைப்பு : T. R. பாப்பா

கண்ணீர்தான் காணிக்கையா—தெய்வமே
பெண்ணாகப் பிறந்தால் எந்நாளும் உலகில் (கண்ணீர்தான்)

பொல்லாத சதியோ—எல்லாம் என் தலைவிதியோ மண
மில்லாத மலர் போல் மாபாவியா னேனே (கண்ணீர்தான்)

பாழானதே எந்தன் வாழ்நாளெல்லாம் துன்பமே
எதிர் பாராமல்—பால் மணம்
மாறாத சேய்தனை—வீணாக
ஏன் பிரித்தார் (கண்ணீர்தான்)

10. நாடகமேடை

இசையமைப்பு : N. S. பாலகிருஷ்ணன்

ராஜகுமாரி ராஜ குடும்பத்தில் பிறந்தோமடி
மகாராஜ குடும்பத்தில் பிறந்தோமடி
ஒரு கூஜாவை நம்பி ஏமாந்தோமடி......மகா

மந்திரிகுமாரி மானாபிமானம் மறந்தோமடி......நம்ப
வாழ் நாளை வீணாக்கி கொண்டோமடி

ராஜகுமாரி
மந்திரிகுமாரி } அந்த வீணுப்போன...... பாழும்
சட்டாம் பிள்ளையாலே

கெட்டோமடி...... புத்தி
கெட்டோமடி......

தூக்குதூக்கி ....ஓ.........ஓ.........ஓ.........
கும்தள கும்தள கும்தள கும்தள
குமாரி ராஜகுமாரி
பப்பள பளபள பளாங்கு பளபள
பக்காப்பசப்புக் காரி

ராஜகுமாரி இவன் எப்படி வந்தா லூசு

தூக்குதூக்கி நீ அப்படி கேளு சபாசு

மந்திரிகுமாரி உன் செப்பிடு வித்தையில்
மயங்கிடமாட்டோம்
செல்லாதடா கை வீச்சு

தூக்குதூக்கி ஓ ஹோ ஹோ ஹோ ஹோ
குஞ்சாலாடு கோதுமை அல்வா லட்டுகளா
சக்கரை லட்டுகளா சொந்த
கூடுவிட்டு கூடுபாஞ்ச சிட்டுகளா ராஜா சிட்டுகளா

ராஜகுமாரி நம்ப அம்மா அப்பா யாரும் தெரிஞ்சா
அநியாயத்தை ஊரார் புரிஞ்சா
அக்கா நமக்கே அவமானந்தான்
வெட்கக் கேடுதான்...... சொன்ன
வெட்கக் கேடுதான்

மந்திரிகுமாரி தன்னாலே தானுங்கெட்ட
உன்னாலே நானுங் கெட்டேன்
என்ன செய்வது இனிமேல்
என்ன செய்வது

தூக்குதூக்கி பலே அப்படிச்சொல்லு அது தான் பாக்கி
அடிச்சான் பிரைசு தூக்குதூக்கி
ஹல் ஹல் ஹல் ஹல்
அருத்தமில்லாமெ பொருத்தமில்லாமெ
கல்யாணந்தானே எல்லாம் உன்னாலதானே
அம்மா உன்னாலே தானே
தேவி உன்னாலே தானே

11. உஷா

இசையமைப்பு : T. R. பாப்பா

உஷா : சதியும் விதியை வென்றதாலே—என்
சபதம் பலித்த தினிமேலே
ஆஹாஹாஹா...... ஆஹாஹாஹா
கவலையும்...... அகலவே—என்
கனவும் பலிக்க மனது போலவே (சதியும்)

மதியில்லாமல் ஆசையினாலே
மமதை அடைந்தாள் காதலினாலே
மனது வைத்தால் ராணியினாலே
மனது வைத்தால்.........ராணி......நீ
மனது வைத்தால் ராணி உன்னாலே
மலையும் அசையாதோ (சதியும்)

வானவில்லுக்கும் வர்ணமே தீட்டுவேன்—அவள்
வாழ்க்கையை கெடுக்க வழி காட்டுவேன்
பழிமூட்டுவேன் கொடி நாட்டுவேன்—அவள்
வஞ்சகம் ஒழிய வாயைப் பூட்டுவேன் (சதியும்)

முத்தம்மா......அம்மா......விஜயா......

உஷா : நஞ்சைக் கலந்தாரோ நளினி உந்தன் வாழ்விலே
வஞ்சகம் செய்தாரோ நெஞ்சம் இரங்காமலே
கண்ணிறைந்த நாதன்

கை நிறைந்த செல்வம்
காத்திருந்தும் வீணே
கள்ளக் காதலாலே
கபடம் செய்யலாமா
அபலையாகலாமா......

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சி

கைவசமுள்ள படங்கள்:

✻ மாப்பிள்ளை

✻ காஞ்சனா

✻ சிங்காரி

✻ பிச்சைக்காரி

✻ வனசுந்தரி

✻ ஏழைபடும்பாடு

✻ பிரஸன்னா

✻ கனகாங்கி

✻ தேவமனோஹரி

(திருச்சி - தஞ்சை ஜில்லாக்களுக்கு)

எதிர்பாருங்கள்

பக்ஷிராஜாவின்

"பொன்னி"

"மரகதம்"

(கருங்குயில் குன்றத்துக் கொலை)

ஜம்பு பிக்சர்ஸ்

தபால் பெட்டி 301

தெப்பக்குளம் போஸ்ட் - திருச்சி

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.